




ஓலை 81 | ஓசை 204 | ஆகஸ்ட் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்**

## பொருள்

**மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்துகூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# பின்தங்கி நின்றிடாதே

காலதத்தின் ஓட்டத்தில் கற்பனைகள் காலொடைந்து
கவிதைக்கு நொண்டிடுதே காயத்தில் வெந்திடுதே
தாலாட்டும் துன்பத்தில் தகித்தேதான் வாழ்க்கையுமே
தடுமாறி திண்டாட தடைத்தாண்ட முடிகிறதா
வாலாட்டும் நாயாக வளமான வாழ்வொன்று
வையகத்தில் இல்லையப்பா  வண்ணமுள்ள வாழ்க்கையப்பா
வேலைகளும் பலவந்து வேதனையில் ஆழ்த்திடுதே
விடியாத மனவலியோ விடியலையும் தேடிடுதே



புண்பட்ட மனமதுவும் புலம்புகின்ற வேளையிலே
புதையுண்டு போகாமல் புதுபித்தே உயிர்த்தெழுவாய்
மண்மீதில் யாரிங்கே மகிழ்வைமட்டும் சுகிக்கின்றார்?
மனவுறுதி வளர்த்திட்டால் மறுயெழுச்சி கண்டிடலாம்
கண்களிலே சிலநேரம் கட்டுகின்ற பூளைப்போல்
காயங்கள் வந்திடலாம் கடந்திடவும் பழகிடுநீ
வெண்மேகம் கருத்தால்தான் வேரிங்கே உயிர்பிடிக்கும்
வீழ்ச்சிகளே படியாகும் வெற்றிக்கு துணைபுரியும்

அறிவுரைகள் சொல்லிடலாம் அனுபவித்தால் நிலைபுரியும்
அழகழகாய் வார்த்தைகளில் அலங்கரிப்பு காகிதங்கள்
முறிந்திட்ட இதயத்தை முளைத்திடவும் செய்திடுமா?
முரணான வாழ்வதனை முடித்திடவும் வழிவருமா
பறிகொடுத்த இன்பத்தின் படிமமாக இருப்பதுதான்
பலமென்று கொக்கரித்து பல்காட்டி சிரித்திடவா!?
வறியவனின் வலியென்ன வாழ்ந்துபார்த்து பின்புசொல்வாய்
வழியெல்லாம் ஏமாற்றம் வறுமையதன் சூழாட்டம்

சின்னசின்ன இன்பத்தை சீக்கிரமாய் கடத்துவிட்டு
சிறகுகளை அடகுவைத்து சிறைக்குள்ளே புகுந்திட்டால்
என்னவென்று சொல்வதுவோ? இயலாமை அணிகலன்மேல்
ஏனிந்த மோகமுமே எறிந்துவிடு முற்றிலுமாய்
முன்னேற வேண்டுமெனில் மூச்சாக முயற்சியினை
முழு நேரம் சுவாசிப்பாய் முழுமனதாய் யாசிப்பாய்
பின்புலமாய் நம்பிக்கை பீடுகளை ஈர்த்துவரும்
பிழைகண்ட போதினிலும் பின்தங்கி நின்றிடாதே

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# வயநாடு

உச்சம் தொட்ட உயிர்கள்
உடலை விட்டு சென்றது,
மலையில் மலர்ந்த மலர்கள்
மழையில் கரைந்து போனது,
குழந்தை என்ன குமரன் என்ன
பெண்மை என்ன உயிர்மை என்ன,
நிலைத்து வாழும் அனைத்தும்
நிலச்சரிவில் போனது,
உயிரற்ற உடல்களை
மனிதம் மண்ணிற்குள் தேடுது,
இயற்கையில் இறைவன் இருந்தால்
இனிதேனும் வாழவிடு.



கவிஞர் ஞா. மணிமாறன், இரெட்டியூர்

# மணிமேகலை

## (இருபத்தி மூன்று)

22. சிறை செய் காதை

சக்காரவாளக் கோட்டத்து முனிவர் செய்தி கேட்டு அதிர்ந்தனர் .
அக்கறையுடன் கேட்டனர் உதயக்குமரன் மாண்டது உண்மையா ?
தயக்கம் இன்றி மணிமேகலை நடந்ததை எல்லாம் உரைத்தாள்
அக்கணமே அவன் உடலை வேறு இடத்தில் ஒளித்து வைத்தனர்.

இதை மன்னனிடம் கூறவேண்டும் உடனே அரண்மனை சென்றனர்
அதை தெரிவிக்கும் முன் காமத்தால் ஏற்படும் தீமைகள் உரைத்தனர்
பதைபதைக்கும் தீமைகள் அனுபவிப்பான் பெண்ணாசை கொண்டவன்
சதை மீது கொண்ட வெறி போதையால் உயிரை இழந்தவர் பலர் உண்டு

சம்பாபதி தெய்வம் அரசன்  காந்தனை  நாட்டை விட்டு வெளியேற்றியது
தம் காமக்கிழத்தியின் மகன் சுகந்தனை மன்னனாக்கி வெளியேறினான்
நம் நாடு நம் மக்கள் சிறப்பான ஆட்சி செய்த சுகந்தனுக்கு ஒரு மகன்
சும்மா இல்லாமல் பெண் பித்தனாக பார்ப்பன பெண் பின்னால் அலைந்தான்

பார்ப்பனப் பெண் மருதி நீராடுகையில் அவளை தன்னிடம் அழைத்தான்
''ஊர் பெருமையோடு வாழ்ந்த நான் இவன் கண்பட்டு புனிதம் இழந்தேன்
கார் இருள் சூழ வாழ தகுதியற்றவள் ஆனேன்.'' வெட்கப் பட்டாள் மருதி
புகார் சதுக்கம் சென்றாள்,''அயலான் மனதில் புகுந்துவிட்டேன் கொன்றுவிடு''

சதுக்கத்துப் பூதம் தவறு செய்தவரகள் மட்டுமே புடைத்து உண்ணும்
''பதுமை போன்றவளே நீ எந்தத் தவறும் செய்யவில்லை வாழ்வாயாக''
அது கேட்ட சுகந்த மன்னன் அவனை தண்டிப்பது தன் கடமை என்றான்
இதுதான் நீதி என்று அவனை தந்தையே  வாளால் வெட்டி வீழ்த்தினான்

இன்னமும் கேள், '' வாணிகன் தருமதத்தன் , மாமன் மகள் விசாகை
மன்னனைப் போல் வாழும் தருமதத்தன் மைத்துனன் அவளுக்கு முறை
தன்னை விரும்புகிறாள் நினைத்தவன் அறிவித்து விட்டான் மற்றவர்க்கு
என்னவள் விசாகை என்னோடு காந்தர்வ திருமணம் செய்து கொண்டாள்

காந்தர்வ கூட்டம் நடந்ததாக மக்கள் விசாகையைப்  பழித்துப்  பேசினார்
மாந்தர் பல இடங்களில் தன்னை விவாதிப்பதை அறிந்தாள்  விசாகை
காந்திற் பாவை முன் என் மீது சுமத்தப் பட்ட பழியை நீக்குவாயாக
சாந்தமாக கூறியது பாவை,'' இவள் மழை தரும் கற்பினள்'' போற்றியது

இப்பிறப்பில் மைத்துனனுடன் கூடேன்.'' கன்னி மாடம் சேர்ந்தாள் .
அப்படியே தருமதத்தனும் , பெற்றோரும் தென் மதுரை சேர்ந்தனர்
எப்போதும் போல மக்களுக்கு ஏராளமான அறச்செயல்கள் செய்தனர்
இப்படி செய்யும் புண்ணியம் பத்தினி இல்லை என்றால் பலன் இல்லை

காமத்தின் தீமைகள் கேட்ட மன்னன்,'' இன்றைக்கும் உள்ளதா ?''
தாமதம் இன்றி பதில் கூறினர் முனிவர், ''இருக்கிறது தங்கள் மகன் .
ஆமாம் உதயகுமரன் மணிமேகலை மேல் ஆசை அவள் பின் சென்றான்
சாமானியனாலும் இராசாவானாலும் இருந்தாலும் குற்றம் குற்றமே .

குற்றம் ஐந்து வகை கள்ளும், பொய்யும், களவும்,கொலை, காமம்
மற்றய நான்கினை காமம் தன்னுடன் வைத்துக்கொள்ளும் தன்மைய
சற்றும் யோசிக்காமல் மணிமேகலை காதலால் கொலையுண்டான்
அற்றய நாழியே மணிமேகலை சிறை தண்டனை பெற்றாள்



தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# சொல்வன்மை

## அதிகாரம் : 65

வாயுள்ளபிள்ளைக்கு பிச்சிப்பூநஞ்சாமோ
நாவன்மையாம் நலம்பெற்றிருத்தல்.
வான்மண்ணையும் அருகிழுக்குமாம்
வேற்றுச் சிறப்படங்காதன்மையாம்.




மேன்மையுங்கேடும் ஒருவர்க்கு
நாச்சொல்லும் சொல்லாலாகுமாதலால்.
சோர்விலா நற்சொற்களில்
தற்காத்துக்கொளல் நலம்.

கேட்போர் தன்வயப்படும்படியும்
கேளாதோர் தன்னுவந்து.
கேட்கவிரும்பவுஞ் செய்யும்
வாய்த்திறனே சொல்வன்மையாம்.

சொற்றிறனறிந்து வாய்விடல்நலம்
அவ்வாய்த்திறனை விடவும்.
மேலான அறம்பொருள்
பாரிலெங்கு மில்லையாம்.

தன்வாய்ச்சொல்லை வெல்ல
எச்சொல்லுமில்லை என்று.
திடனாய் ஆய்ந்தபின்னே
கருதியச்சொல் விடுத்தல்நலம்.

தன்சொல் பிறர்விரும்பவும்
பிறர்சொல்லின் பயனாய்ந்து.
ஏற்றுக்கொளலுமே மாசற்றோரின்
சிறப்புடைக் கொள்கையாம்.

சோர்வில்லா சொல்வல்லனாய்
அவைக்கஞ்சாது கருதியச்சொல்.
சொல்வோனை மாறுகொண்டு
வெல்லுதல் எவர்க்குமருமையாம்.

கோர்த்த சொல்லெடுத்து
தேர்ந்த இனிமையொடு.
பேசவல்லோரின் ஏவலை
தேசம் வேண்டிநிற்கும்.

சிற்சொல்லுள் கருத்துரைக்க
இயலா நாவன்மையிலாரே.
பெருஞ்சொற்கள் பயன்படுத்த
எப்போதும் எண்ணுவர்.

தானறிந்த நூற்பொருளை
பிறருணரச் செயலறியார்.
கொத்தாய் மலர்ந்தும்
மணமில்லா மலருக்கொப்பர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

ஆத்தங்கரை ஓரத்திலே
அந்திசாயும் நேரத்திலே
அடிமனசு படபடக்க
அத்தமக காத்திருக்கேன்.

பொன்னான மனசுக்காரன்
பொழுதில வந்துடறதா
சொல்லிவிட்டுப் போனானே
சொன்ன சொல்லு என்னாச்சு?

என்னயக் காக்க வச்சி
எங்கிட்டுப் போனாயோ?
ஏந்திழையின் நெஞ்சத்தில
ஏக்கங்கள் எத்தனயோ?

பொங்கிப் பாயுது
ஆத்து வெள்ளம்
பொழப்பு கெட்ட
மச்சானத் தான காணோம்.

இதயத்தில ஈரமில்லயா?
இப்படி காக்க வச்சானே?
இங்க நான் தவிக்கிறதோ
இன்னுமா ஒனக்கு புரியலியோ?



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# உன்னைக் கண்டாலே என்னை மறக்கிறேனடி

உன்னைக் கண்டாலே என்னை மறக்கிறேனடி
காந்தக் கண்ணாலே என்னை கவர்ந்தாயடி
கவிதை வரிகளால் உள்ளம் துடிக்குதடி
வார்த்தைகள் ஒவ்வொன்றும் இதயத்தை தொட்டதடி
உனது புன்னகையால் நாணம் கொண்டேனடி
மனம் உன்னைக் காணாமல் தவிக்குதடி
கனவுலகில் வந்து வந்து கொல்லுதடி
திரும்பும் திசையெல்லாம் உன் நெனப்படி
எனக்காக பூமியில் நீ வந்தாயடி
ஆசையாய் முத்தம் ஒன்று தந்தாயடி
என் மூச்சே உன் சுவாசமடி
உனக்காக நான் தினமும் காத்திருப்பேனடி



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# முகமறியா நட்பு

கைபேசி இல்லா காலத்தில்
கடிதங்கள் மூலம் தொடர்ந்த
முகம் அறியா மனிதர்களோடு
முழுமையாய் கலந்துரையாடிய
பேனா நட்பு வட்டம் தேய்ந்து
மறைந்து போக!
உலகம் உள்ளங்கை அளவில்
உருமாறிட!
முகநூல், மற்றும் இணையத்தில்
உலவிடும் தளங்களில்
அடையாளத்தைத் துறந்து
தன்னை மறந்து
முகமூடியோடு நட்பு பூண்டு
வாழ்கையைத் தொலைத்து
உணர்வுகளைக் கொன்று வாழும்
இழிநிலைக்கு ஆளாகும் மனிதர்கள்
நடைபிணமாய் மாறிப் போக
இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

ஆறுக்கு
திரும்பிப் போக ஆசை.
நிலத்திற்கு
உரக்கப் பேச ஆசை.
காற்றுக்கு
கொடுத்ததைப் பிடுங்க ஆசை.
ஆகாயத்திற்கு
தரையிறங்க ஆசை.
நெருப்புக்கு
வானம் தொட ஆசை.
எனக்கு ஏன் கூடாது
ஆசை?
*

அன்றொரு நாள்
எல்லோருக்கும்
தேவையானவொன்று
பின்வரும் நாளில்
ஒருவருக்கும்
தேவையற்றதாகிறது.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உன்றன் வரவே என்றன் விடியல்

வேல்விழிப் பார்வையால்
எனை வீழ்த்தியவளே

இதயவானில் உலவும்
முழுமதியும் நீதானே

உறவாகி வந்தவளே
உணர்வில் கலந்திட்டாயே

உயிர்மூச்சும் உனதாகிட
சுவாசத்தில் இணைந்தாயே

நினைவுகள் தாலாட்ட
நினைவலைகள் ஆர்ப்பரிக்கிறதே

காதலும் கனிந்திங்கே
கவிதை பாடுகிறதே



புதுமை நாயகியே
பூந்தென்றல் காற்றே

இதழசைவில் ஆயிரம்
ஆசைகள் தோன்றுகிறதே

இமைமூடாது காத்திருக்கிறேன்
இனியவள் உனக்காகவே

தேடிய பந்தமே
நீதான் சொந்தமே

உன்றன் வரவே
என்றன் விடியல்

இசைபாடி வந்தாய்
இனிமைதனைத் தந்தாய்

குரலோசையும் கீதமாகிட
பண்ணிசை இசைக்கிறேன்

வசந்தமானவளே வாழ்வில்
இசைந்தே இணைந்திடு

இலக்கண வடிவானவளே
இலக்கிய நாயகியே

காவியம் படைத்திடவே
வந்துவிடு அன்பே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# தொலை தூரக் காதல்



தொலை தூரக் காதலில்
எத்தனையோ துயரங்களை
எல்லாம் கடந்துவந்தாளும்

நீ இல்லாத தனிமையின்
துயரங்களைத்தான்
கடக்கவே முடிவதில்லை

இந்த வாழ்கையில்
எல்லாவற்றையும் இழந்துவிடும்
தைரியம் இருந்தாலும்
உன்னை இழக்கும் தைரியம் மட்டும்
என்னிடம் இல்லை

தண்ணீரை பிரிந்து இருக்கும் ஒரு மீனின் தவிப்பு
எத்தனை வலி நிறைந்ததோ
அத்தனை வலி நிறைந்தது
உன்னை பிரிந்து இருக்கும் இந்த தவிப்பு

யாரும் வாழ விரும்பாத ஒரு பாலைவனம்
எத்தனை வெறுமையானதோ
அத்தனை வெறுமையானது
உன்னை பிரிந்து இருக்கும் இந்த வாழ்கை.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர்(இலங்கை)

# கேள்வி கேள்

வாழுங் காலத்தில்
வாழ்ந்திடும் போதினில்

அனைத்தும் அறிந்த
அறிஞர் எவருமிலர்.

ஏட்டுச் சுரைக்காய்
வீட்டிற்கு உதவாது.

கேள்வி ஞானம்
கேட்டிடப் பெருகும்.

புரியாமல் இருப்பதைப்
புரிந்திடக் கேட்டிடு.

கேட்பதால் யாரும்
கிண்டல் செய்யார்.

விடையை அறியாதாரே
கேலியாய் இகழ்வர்.

கற்றலின் கேட்டலே
கல்விக் கழகாகும்.

சிறுவயதில் மனனஞ்
செய்தல் இடர்ப்பாடாம்.

படிப்பதை நினைவில்
பலநாள் இருப்பாக்க

புரிதல் வேண்டும்.
புரிவதே மறக்காது.

காலங் கடந்தும்
கருத்தாய் நிலைக்கும்.

பட்டறிவு நிறைந்தோர்
பரவசமாய் வாழ்வர்.

புத்தக அறிவோ
புலனாகாது நமக்கு.

அனைத்தையும் படித்து
அறிதல் இயலாது.

கேள்வி கேட்போரேக்
கேழ்பு அடைவராம்.

(கேழ்பு-நன்மை)



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# ப்ரியசகி



கண் விழித்ததும் பசிக்குதென்பாய்
உணவு தந்தால் உண்ண மறுப்பாய்
வயிற்றைப் பசி வற்புறுத்துகையில்
வாயில் வைத்ததை வாந்தி எடுப்பாய்
பிள்ளை பெற்றிட பிள்ளையாய் மாறிப்போனாய்
உறக்கம் கண்டு உற்சாகமடைகிறாய்
அயர்ச்சியில் அவ்வப்போது அங்கங்கு புரள்கிறாய்
ஓட்டம் குறைத்து ஓரடி ஈரடி எண்ணுகிறாய்
உற்சாக முகத்தில் ஒரு களை பின்னுகிறாய்
ஊறுகாயில் உலகை மறக்கிறாய்
உள்ளே ஓடும் உயிரை உணர்ந்து
வெட்கத்தில் தானே சிரிக்கிறாய்
நேரே படுத்தால் நிம்மதி காணாது
இட வலம் கண்டு உறக்கத்தை அழைக்கிறாய்
எப்படி இருக்குமென கனவுகளில் மூழ்கி
எதையெதையோ எண்ணி நாணத்தில் சிரிக்கிறாய்
வாட்டும் சோர்வு எட்டிப் பார்க்கையில்
வாரிசை நினைத்து விரட்டியடிப்பாய்
வாழ்வின் சொர்க்கத்தை கண்முன் கண்டு
விழிகளில் நாளும் பரவசமடைவாய்
என்னைக் கண்டதும் எல்லாம் மறந்து கட்டிக்கொள்வாய்
ருசிக்கெனக் கேட்டால் கிடைக்காதென்றே
சிசுவுக்கெனப் புசிப்பாய்
உயிர் சுமந்து உயிர் பார்க்க
உடலைப் பேணி உருவத்தை நீட்டுவாய்
ஊசி போடாது ஓடிய தருணங்களை
நினைவில் கொண்டே உள்ளூர சிரித்து
உள்ளே உயிர் சிறக்க ஊசி போடுவாய்
தொல்லை இல்லாது கர்ப்பம் தொடர
நல்லதாய் நாளும் நம்பிக்கை பிறக்க
எல்லை இல்லாது எல்லாச் சாமியும் வேண்டுவாய்
பெண்ணாய்ப் பிறந்ததன் பேரதிசயம் உணர்ந்து
பெருமையில் பூரிப்பாய்
மண்ணில் மாண்புகள் மகத்துவம் காண
மசக்கை கொண்டாய்
சிறப்பைச் சேமித்து சிந்தையில் நுழைப்பாய்
கண்ணில் ஒளி கூட்டி கற்பனை வளர்ப்பாய்
ஓய்வைத் தேடி ஓரிடம் நிற்கையில்
வேலையைச் செய் என பேச்சுகள் நீளும்
பிரசவம் எளிதாக சிரமத்தில் செய்வாய்
காணும் மழலைகளை கண்மூடாது ரசிப்பாய்
உலகம் காலடியில் உட்கார்ந்திருப்பதாய்
உள்ளே எண்ணி உற்சாகமடைவாய்
பிறந்த வீடு தேடிப் பாசம் அழைக்கையில்
பிரியமனதை பிரிய மாட்டாது போராடுவாய்
எப்படி மழலையை வளர்ப்பதென
எச்சரிக்கைப் பட்டியல் நீட்டுவாய்
தோளுக்கு வளர்ந்து உலகம் தொழும்படியாய்
பிள்ளை பெருமை சேர்ப்பதாய்
கனவுகளில் இளைப்பாறுவாய்
வயிற்றில் சிசு நகரும் உணர்வில்
வானில் பறந்திடும் இன்பத்தில் மிதப்பாய்
என்றைக்குப் பிரசாத் திருநாள் வருமென
ஏக்கத்தில் எதிர்பார்ப்பாய்.

(கர்ப்பிணி மனைவியைப் பேணும் கணவனின் மனநிலை)

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்கபுரம்

# ஊடல்

மரம் ஒன்றாக இருந்தாலும்
கிளைகள் வேறாகதான் இருக்கின்றன.
கிளைகள் வேறாக இருந்தாலும்
விழுதுகள் வேரை நோக்கியே வருகின்றன.



சின்ன சின்ன ஊடலில்
வட்டமிட்டு வாதம் செய்தால்
வாடல் கட்டும் கட்டி முடித்துவிடும்

கண்ணோக்கி பார்த்து
இமை தாழ்த்தி வைத்து
மனங்களில் பேசி
சிணுங்களில் முடித்து
தலையசைத்து கண் அசைத்தால்

முடியாத ஊடலும்
முடிந்து விடும்
அடங்காத அன்பினில்
அடங்கிவிடும்

ஊடல் கோபமானால்
கோபம் பிணக்காகும்
பிணக்கு பிரிவை
பிணைத்து விடும்.

எனக்கான அன்பை
தொலைத்துவிட்டு
எதற்கான வாழ்வை
வாழ்ந்திட வேண்டும் ?!

உனக்கான இதயம்
இங்கு துடிக்க
எதற்காக நான்
சண்டையிட வேண்டும்
அந்தி பொழுது முடிவதற்குள்
சண்டை பொழுதுகள் முடிந்து விட்டால்

வெள்ளுவா இரவும் சொல்லும் வெல்லாத அன்பு
எதுவும் இல்லையென்று.
சொல்லாத காதலுக்கு
அன்பு அதிகம் என்று.

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

கால் நூற்றாண்டு கடந்தும்
ஆறா வடுக்கள் நெஞ்சில்.
விடிவு பிறக்குமென
வேலியில் காத்திருக்க.
தீரா வலி தந்து
ஆறா துன்பம் வழங்கிய
காடையர் கூட்டம்.
இல்லாமை பரிசளித்த பொழுதுகள்
இருள் சூழ இருப்பு கேள்விக்குறியாய்.
திரண்ட மக்கள் பெருந்திரள்
தடியெடுத்து ஒடுக்கும் கூலியர்.
மீன்கள் நீந்திய ஆறில்
உடல்கள் மிதந்தன.
இருபதாம் நூற்றாண்டின்
இருட்டுப்பக்கத்தை நிரப்பிய
கொடிய நிகழ்வு.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# பேரழகு



கடலின் கரை அழகு!
கரையின் அலை அழகு!
அலையின் நுரை அழகு
அலை மோதும் படகுமழகு!

விடியல்களின் காட்சி அழகு
கதிரவனின் கதிர் அழகு!
சேவலின் கூவல் அழகு
சேற்றினில் தாமரையுமழகு!

கலைகளின் வகை அழகு
கலைஞனின் ஓவியம் அழகு!
கவிகளின் வரிகள் அழகு
வரிகளின் இசைவுமழகு!

பெண்ணின் நாணம் அழகு
நாணின் பெண் மிக அழகு!
ஆணுக்கு வீரம் அழகு
வீரத்தில் ஆண் பேரழகு!

மானின் விழிகள் அழகு
விழிகளின் உவமை அழகு!
குதிரையின் வால் அழகு
பெண்களின் கூந்தலுமழகு!

மலைகளின் வளைவுகள் அழகு
மலையோர ஊற்றும் அழகு!
மென்பஞ்சு மேகங்கள் அழகு
மெல்லச் சாயும் அந்திவான் பேரழகு!

விண்ணுக்கு மீனினம் அழகு
வானவில்லுக்கு நிறம் அழகு!
சொல்லுக்கு சேரும் எழுத்தழகு
சொற்பிணைவில் கவிகள் பேரழகு!

முற்றத்தில் மரங்கள் அழகு
மரங்களில் கனிகள் அழகு!
மலர்களின் வாசனை அழகு
பூவின் முடிவில் காய்கனி பேரழகு!

அரும்புகளின் பசுமை அழகு
அருளாளனின் நுட்பமும் அழகு!
அவன் பேசும் வார்த்தைகள் அழகு
அவன் அற்புதம் பாரினில் பேரழகு!

இரை தேடும் புள்ளினம் அழகு
இயற்கை தரும் இனிமை அழகு!
இறைவன் படைப்பில் யாதுமழகு
படைத்தவன் அருள்கள் பேரழகு!

கவிஞர் செண்பகச்சோலையாள் ஆய்ஷா

# துளிப்பா



அலைகள் வந்து
கரையை தொட்டது
புயல் சீற்றம்

சீற்றமாய் எழுந்து
ஓடிக் கொண்டிருந்தது
காட்டுக்குள் அரவம்

அரவத்தின் நடமாட்டம்
அதிகமாய் இருந்தது
எரிபொருள் விலை

விலை ஏற்றம்
அறிவிப்பு வெளியிட்டது
பணி நியமனம்

நியமன வேலைகள்
குறைந்து வருகின்றன
மழைநீர் சேகரிப்பு

சேகரிக்கப்பட்ட நெகிழிகள்
அழித்து ஒழிக்கப்பட்டன
கள்ளச்சாராய ஊறல்

ஊறிடும் ஊற்றுநீர்
சுவையாக இருந்தது
சிறுதானிய உணவு

உணவே மருந்து
மூத்தோர் சொன்னது
அனுபவ பாடம்

பாடங்கள் யாவும்
மாறிக் கொண்டிருந்தன
பழக்க வழக்கம்

வழக்கமான பணிகளில்
ஓடிக் கொண்டிருந்தன
நீரின் அலைகள்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

கிராமத்து எல்லையோரம் ஆறடி
உயரத்தில் ஆகாசம் முட்ட நிற்கும்
கிராமத்து காவல்காரன்

எங்கள் வெள்ளை உள்ள மக்களால்
கற்களை கூட சாமியாக்க முடிந்தது

இது கூரை கட்டி ஆடம்பரத்தில்
திளைக்கும் பணக்கார சாமி இல்லை

சுருட்டு படைத்தாலும் சுனங்காமல்
சுகம் தரும் சாமி இது

எங்கள் குலதெய்வத்தை ஊருக்கு
வெளியே காவல் நிறுத்தினோம்
காரணமாய்

விழிகளை உருட்டி வீரம் காட்டிய
எம் சாமிகள் இன்று விளம்பர பலகைகள்
தாங்கி நிற்கும் கல்மரங்களாய்

கோபத்தோடும் கருணையோடும் காட்சி
தந்த குல சாமிகள் இணைய இணைப்பு
தாங்கி நிற்கும் பரிதாபங்களாய்

என்ன காரணம் இதற்கு
அர்த்தமில்லா ஆயிரம் கேள்விகள்
புண்ணாகி கிடக்குது இந்த பாழ்பட்ட மனசு



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ஆட்டமும் ஓட்டமும்

நான் காசு கொடுத்துவாங்கிய
பொருட்களில் எல்லாம்
என் காசை பிடுங்கும்
விளம்பரங்கள்

தள்ளுபடி என்ற பெயரில்
காலன் நெருங்கிய பொருட்களுக்கு
இரையானது என் கையிருப்பு

எதிர்வீட்டில் உண்டு
அடுத்தவீட்டில் உண்டு என்று
என் வீட்டில் தஞ்சம் அடைந்த
பொருட்களோ ஏராளம்




பசியறிந்து உண்டதுபோய்
சுவைக்காக உண்டதும் போய்
வண்ணங்களுக்காகவும்
பொம்மைகளுக்காகவும்
என் குழந்தைகளை தின்பண்டம்
கேட்க வைத்தது இந்த வஞ்சக விளம்பரம்

இ.எம்.ஐ வசதியை சொல்லி சொல்லியே
என் சம்பளத்தை இளைக்கவைத்தது

உள்ளாடை உடனேயே
சோப்புவிற்கும் பெண்ணை தவிர்க்க
சேனலை மாற்றினால்
லுங்கி வாங்க சொல்லும்
டூபீஸ் மாடல்கள் அடுத்த சேனலில்

காண்டம் வாங்க அரைகூவல்
கக்கூஸ் கழுவ ஒரு கூவல்
வாங்க , விற்க, அடகுவைக்க என
தங்கத்தை வைத்து பரமபதம் ஆடும்
சகுனிகளின் சில கூவல்கள்
இதையெல்லாம் கடந்து வந்தால்

அந்த மூன்று நாட்கள் எனச்சொல்லியே
மாதம் முப்பது நாளும்
வீட்டுக்கு விலக்கானது
என் வண்ணத்தொலைக்காட்சி

பண்ணாட்டு வியாபாரம்
கொடிகட்டி பறந்திட என் வீட்டு
சாதனங்கள் கூவுகிறது

இவைகளின் ஆட்டம் இருக்கும்வரை
என் ஓட்டமும் தொடரும் இ.எம்.ஐ.காக

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# தென்றலின் வருடல்

வருடிச் செல்லும்
தென்றலுக்கு
தெரியவில்லை

வாடைக் காற்றுக்கு
தெரியவில்லை

வீசும் மலர் வாசம்
என் மங்கையவளின்
வருகை யென்று



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# பட்டம்

பட்டம் அழகிய பட்டமாம்
பண்புகள் நிறைந்த பட்டமாம்
பறக்க விடும் பட்டமாம்
பல நிறங்களில் பட்டமாம்
பல வகைகளிலும் பட்டமாம்



வானுக்கும் அழகு சேர்த்திடுமாம்
வானமே அழகு என்றாலும்
வானை இன்னும் மெருகூட்டி
வானிலே பறவை போல
வானவில்லின் நிறங்கள் போல

பட்டம் வானில் பறந்திடுமாம்
பட்டாம்பூச்சி போல் பறந்திடுமாம்
பட்டாம்பூச்சி போல் சிறுவர்களும்
பறவைபோல பட்டங்களுடன் ஓடியாடி
பருவக்காற்று வீசவே விளையாடிடுவார்களே

வயது வந்தோரும் மகிழ்ந்திட
வண்ணம் நிறைந்த பட்டங்களை
வயது வரம்பு இன்றியே
வடிவான பட்டங்களை விடுவார்களே
வர்ணனைகள் அழகு சேர்க்குமே

கவிஞர் எச். டீ. எச் பஹ்ரா, கொழும்பு

# கண்ணாளனே!

மறைந்திருந்து பார்த்தாயே
மர்மத்துடன் பேசினாயே
மன்னவனே மனதினிய கண்ணாளனே

மகளான எனையுமே
மனையாளாக்கினாயே
மணியாக ஆட்டிவைத்தாயே

மனக் கோவிலிலே குடிவந்தாயே
மஞ்சள்கயிறு சூட்டினாயே
மகிழ்ச்சிதனை பெருக்கினாயே

மழலைச்செல்வமும் கொடுத்தாயே
மலையன்பையும் பொழிந்தாயே
மடலெழுதி தந்தாயே

மரியாதைக்குரியவனே
மல்லிகை மணவாளனே
மரிக்கொழுந்து வாசமுள்ளவனே

மண்ணில் வாழும் நாளிலேயே
மதியோடு சுதியாக உன்னோடே
மரணம்கூட உன்மடியினிலே

மன்றாடுவேனே இறையிடமே
மல்லுக்கட்டி நிற்பேனே!



கவிஞர் நீலா சுபாஷ், ஆத்தூர்

இதழ்கள் பயிலும்
இதழாராய்ச்சியில்
இதழ்கள் பிறக்கும்.
கவிகள் உணரும்
கவியாராய்ச்சியில்
கவிகள் பிறக்கும்



கவிஞர் மதீரா (அறிவிப்பாளினி), இலங்கை

# துன்பங்கள் காண்

துன்பங்கள் கண்டிராத
வாழ்க்கை ஏது
துயரங்கள் சகித்திடாத
பயணங்கள் ஏது

காணும் பாதை முழுதும்
தேங்கிக் கிடக்கும்
துன்பங்களை துச்சமென உடை
அதுவே உன் முயற்சிக்கு விடை

துன்பங்கள் உன் வாழ்வை
சீரமைத்து விடும்
சிறப்பான பொறுமையை
என்றென்றும் தரும்

ஆதலால் துன்பங்கள் காண்
பின் அதிலிருந்து மீண்டு வா
உலகம் உன் வசம்
உன்னதமாய் மாறும்



கவிஞர் ஷப்ரா இல்முத்தீன், அட்டாளைச்சேனை (இலங்கை)

ஏதோ பெரியவங்க
பேசிட்டு இருக்கும்போது
என்னன்னுக் கேட்டா
சுரைக்காய்க்கு
உப்பில்லைன்னு
சொன்னாங்க,

நான் இதை
எங்கே கொண்டு
வைக்கனும் ?
கேட்டா
நாய் குரைக்கும் போது
குப்பையில் போடுன்னு
சொன்னாங்க,



மழையும் பெய்யுது
வெயிலும் அடிக்குது
என்னன்னுக் கேட்டா
காக்காவுக்கும், நரிக்கும்
கல்யாணம் அப்படினாங்க,

தாம்பூல வெத்தலையை
நான் சாப்பிடப் போறேன்னு சொன்னா,
கோழி வந்துக் கொத்தும்ன்னு
அந்த அக்கா சொல்லுறாங்க,

இப்படிப் பட்ட கதைகள்
சுவாரசியமாகச் சொல்ல
இந்தக் காலத்தில்
கதைச் சொல்லிகளும்
இல்லாமல் போய் விட்டார்களே
என்று நினைக்கும் போது மட்டும்
அந்தக் கதைகளை விட
வேதனையாய் இருக்கிறது

கவிஞர் இரா. மதிராஜ்

# ஹைக்கூ

கோடைகாலத்து பாலைவனப்பூங்கா
குடிநீர் தானியங்கியில் தேனீக்கள்
காத்திருக்கும் சிறுமி

பாலையில் ஓடும் குட்டிமுயல்
துரத்தும் ராஜாளியின் பாதையில்
மணற்புயல்.

கோடையில் விடாமழை
நேராக தளிர்க்கும் சிறுமரம்
தாங்கி நிற்கும் காய்ந்தகுச்சிகள்.



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# தர்மம்

இதயத்தில் ஊறும் இரத்தத்தின் உதிப்பினால்
இயங்கிடும் நாளும் உடலோ உயிர்ப்பினால்
கைகள் கொண்ட ஈகையின் பண்பினால்
கைவசம் செல்வம் துளிர்த்திடும் மாண்பினால்

பசித்த மானிடர் புசிக்க உணவிடல்
இரசித்து இறைவனும் உவந்திடும் செயல்
வெஞ்சம் கொண்டவர் நெஞ்சைப் பஞ்சாக்கும்
வாஞ்சை மிகுந்து உறவாட வழிகோலும்



அறவாழ்வு வாழ்ந்திடல் அகிம்சையை உருவாக்கும்
பிறர்வாழ்வை அதனாலே பிரகாசமும் ஆக்கும்
குவலயம் நன்றே குன்றாமல் வென்றிடும்
குன்றுபோல் என்றுமே தர்மம் நின்றிடும்

கனிதரும் இனிமையாய் பனிதரும் குளிர்மையாய்
மனிதரைப் புனிதராய் இருமையிலும் உயர்த்திடும்
கருமைகள் அருகியே வறுமையும் கருகியே
அருமையாய் வாழ்விலே நறுமணம் பெருகிடும்

கவிஞர் பஸ்லா பர்ஸான், காத்தான்குடி (இலங்கை)


# கண்ணீரின் பெருக்கு

மழைதுளியை கண்டு
மனம் மகிழ்ந்தோம், இன்று
மழை நீருடன் கண்ணீரும்
கரைந்து செல்கிறதே.
பலவருடம் சுமந்த நிலத்தாயும்
பசியாத்தி கொண்டாளோ
பச்சபிள்ளை பாராது,
அழகான உடலும்சிதைந்து
அலைபேசி வழியே
அடையாளம் கண்டு
கண்ணீர் வடிக்கும்
காலமாகி போனதே,
இயல்பு நிலைக்கு
வரவேண்டும் வயநாடு
இனியொரு பொழுதும்
இயற்கையின் கோரதாண்டவம் வேண்டாம்
எந்தநாட்டுக்கும்மென்று
வேண்டிக் கொள்வோமே அனைவரும்.



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# கனாக்கண்டேன்



காலத்தின் ஓட்டத்தில்
காலனின் வரவினில்
ஞாலத்தில் வாழ்ந்திட
நல்லதாய் கனாக்கண்டேன்.

ஏலத்தில் போயிடும்
ஏழையிவன் வாழ்வினில்
ஆழத்தில் இருந்திடும்
வைரத்தை எடுத்திட

நான்வாழ்ந்த வாழ்க்கை
நலமாக அமைந்திட
நாளைய தலைமுறை
வரலாறாய் படித்திட

நாளும்தான் கனாக்கண்டேன்
நல்லதாய் வினாக்கொண்டேன்.
கோலத்தின் வண்ணம் போல்
கொள்கையில் மாற்றமில்லை.

தூக்கங்கள் தொலைவானதும்
ஏக்கங்கள் விரைவானதும்
ஏழ்மையே நிலையானதும்
என்னாளும் வலியானதும்.

வாழ்க்கை வளமாக்கிட
ஊக்கமே உரமாகிட
உழைப்பினை கைவிடாமல்
உண்மையாய் உழைக்கிறேன்.

வரலாறு படைப்பேனோ
ஏழ்மையை ஒழிப்பேனோ
எண்ணம்போல் வாழ்க்கையை
இனியதாய் அமைப்பேனோ.

நிலையில்லா வாழ்வினில்
நிலையாக ஆவேனோ.
நடப்பது நடக்கட்டும்
நான்நடந்தே போகிறேன்.

நாளையநாள் எனதாகுமோ
நான்நாளை மண்ணாவேனோ.
படைத்தவன் இருந்தாள்
விட்டுவைக்கட்டும்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# ஏழ்மையை விரட்டு

மனிதனாய்ப் பிறந்திட்ட மாந்தருள் பலர்
மண்ணில் வறுமையில் உழல்வோரும் உளர்

இல்லாமை நிதமும் விரட்டி வந்திடும்
இருப்போர் ஈவதும் இருட்டடிப்புச் செய்திடும்
இயலாமை அகற்றிடும் ஆற்றல் கொண்டு
இன்னல் களைந்திட முயன்றிட வேண்டும்

இறைவன் தந்த அறிவின் துணையால்
வறுமையை எண்ணி வாடி நிற்காது
கரையும் பொழுதுகளைப் பயனுள்ளதாக்கி
விரைந்து வென்றிடத் துணிந்திட வேண்டும்



சொல்லில் செயலில் நேர்மை கொண்டு
கள்ளம் இல்லாப் பணிகள் செய்து
கிடைக்கும் தொழிலில் திருப்தி கண்டு
உழைத்திட ஏழ்மை ஓடிப் போகும்

நிரந்தரம் அற்ற வறுமை போக்கி
நிம்மதி வானில் சிறகு விரிக்க
நம்பிக்கை நாணயம் கைகொடுத்துக் காக்கும்
நாளைய வாழ்வும் மகிழ்வாய் அமையும்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# மழைக்கால நிலவு

ஒரு துளி மழைத்துளி
பதம் பார்த்தது மண்ணில்

சிறுகாம்பின் புல்நுனி
ஸ்பரிசம் கொண்டது மெல்ல

வெள்ளிக்கம்பியின் நூலிழை
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில்

மழைக்கால நிலவு தன்னில்
வாசம் கொண்டது ஈரமண்ணில்

ஜன்னலோர நிலவு தரிசனம்
நாளும் சொன்னது ஒரு துளிப்பா

ஆரம்பப் பள்ளிப் பருவத்தில்
மழைநீரில் காகிதக் கப்பல் விட்டது
வானத்து நிலவிடம் சென்று
வாங்கி வா பட்டம் என்றது

அந்திமாலை முன்னிருட்டில்
பௌர்ணமி நிலவின் தரிசனம்
என்றும் இளமைக்கால ஒளிக்கீற்று

மழைக்கால நிலவினைத் தேடி
அனுதினமாய் ரசிக்கிறேன்
ரசித்து ரசித்து வியக்கிறேன்

நிலவின் மடியில் ஒரு துளி -அது
மழைக்கால நிலவின் பனித்துளி



கவிஞர் மு செந்தூர்கனி, முத்துகிருஷ்ணாபுரம், தூத்துக்குடி

# சுதந்திரம்

பெற்றோம் சுதந்திரத்தைப் போராடியே
வீரத்தால் விளைந்த விடுதலையை
வெளிப்படுத்துவோம் நாமும் விண்ணதிரவே
இறுதி மூச்சு வரையிலும் முயன்றிடுவோம்
இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்காக
இன்னல்கள் இல்லா இத்திருநாட்டை
இமயத்தில் நின்று காத்திடுவோம்
சுதந்திரத்திற்காக இன்னுயிர் தந்த
தியாகிகளை மறவாதிருப்போம்
சண்டை சச்சரவு இல்லா நாடாய் மாற்றிடுவோம்
பிறந்த நாட்டைப் பிரித்துப் பார்க்கும் எவரையும்
இரும்புக் கரம் கொண்டு அடக்கிடுவோம்
இமயமும் குமரியும்
இணைந்திடும் வண்ணம் வந்த சுதந்திரமே
மனிதம் போற்றி வாழ்ந்திடுவோம்
சுதந்திரத்தைப் பேணிக் காத்திடுவோமே!



கவிஞர் ஜோதிமணி, பெரிய குமாரபாளையம்

# ஹைக்கூ

மக்கள் கூட்டம்
ஈ மொய்த்துக் கொண்டிருக்கிறது
நடுவில் பிணம்

பழைய புத்தகத்தை
வாசிக்காமலேயே எடை போடுகிறது
காயிலாங்கடை தராசு

உலர்ந்த வடகத்தை
நினைவுபடுத்திச் செல்கின்றது
மொட்டை மாடி பறவை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# பாசக்காரன்

முடங்கி கிடந்த என்னையும்
என் குறும்பு தனத்தையும்
என் குழந்தை தனத்தையும்
மீட்டெழச் செய்த
பாசக்காரன் நீயே.



கவிஞர் ஜெ. சுரேகா, திண்டுக்கல்

# உறவுக்கு கை கொடுப்போம்

அக்கம் பக்கம் மனிதர்களிடம் அன்பாக பழகி
உறவு வளர்த்த காலமெல்லாம் மலையேறி போச்சு.

திருமணம் திருவிழா குடும்ப நிகழ்வுகள்
தன் வீட்டு நிகழ்வாய் பார்த்த காலம் போயே போச்சு.

காசு பணம் வேலையென பொருளாதார நெருக்கடி
ரெக்க கட்டி பறந்து பறந்து உறவெல்லாம் மறந்து போச்சு.

உயிரான உறவுகள் எல்லாம் ஒன்றாக கூடி வடம் பிடித்து
தேர் இழுத்து *உறவை கட்டி ஆண்ட காலம்*
எல்லாம் கனவாய் போச்சு.



ஊரை மறந்து உறவை மருந்து சொந்த பந்தம் யாரென்று
*வரும் கால பிள்ளைகளுக்கு* சொல்லி வளர்க்க நேரமில்லை.

சொந்தம் என்று யாருமில்லை *காசு பணம் சொத்துனு*
பரபரப்பு வாழ்க்கையில பக்கம் வரும் சொந்தம் கூட
பார்த்து பேச நேரமில்லை.

முகமூடி அணிந்து கொண்டு பொய் வாழ்க்கை வாழறோம்
அந்த நாள் வாழ்வுதான் *நினைத்தாலே இனிக்குதே*
இனி அந்த காலமும் தான் கனவாவே முடிந்திடுமோ.

இனிவரும் காலத்தில் உறவோடு கூடி உறவாய் வாழ்ந்து
*உறவுக்கு கை கொடுப்போம்*.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# எண்ணத்தில் சிறந்திடு



கண்ணால் காண்பதுமிங்கே
பொய் என்ற கூற்றுக்கிணங்க!

கண்களை மூடிடு மனிதா நீ
கண்களிரண்டையும் மூடிடு!

கண்களை மூடி அகமதைத் திறந்திடு
அகமதைத் திறந்திட
அன்பானவர்களும் உன் வசமே!

கண்களை மூடிடு கனவுதனை கண்டிடு
கண்டிட்ட கனவுதனை நனவாக்கிடு!

கண்களை மூடியே ஞானமதைத் தேடிடு
அன்பும் அறிவும் உன் எண்ணத்திலே உதித்திடுமே!

கண்களை மூடிய பூனை போல்
மூடராய் நீயும் இல்லாது
கண்களை மூடிடினும்
கருத்துதனில் தெளிவாய் இருந்திடு மனிதா!

கண்களை மூடினாலும்
எண்ணமதில் சிறந்து விளங்கிடு!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

மடித்து வைத்த
மனதை திறக்க மனமில்லை
இனித்து கிடக்கும் நினைவுத்
தூரிகையை கலைந்திடாத
காவலில்



நடித்து கொண்டு
வாழ்வதில் சற்றே
வெறுமை சூடிய நிழலை
ஓரம் தள்ளுகையில்
மிஞ்சுவது ஏமாற்றக் கடலே

வெடித்து சிதறக்
காத்திருக்கும் விம்மல்கள்
அமிழ்ந்து அமிழ்ந்து
ஆழ்ந்த இரைச்சலில்

கடித்து குதறும்
வார்த்தைத் தூண்டிலை
தூரம் வீசுகையில்
சிக்காத சேதிக்கு வம்படியின்
வாசல்

படித்து பார்க்கையில்
பாசாங்கு மனிதர்களின்
பகலை இரவாக்கி
இரவை பகலாக்கும் பேச்சில்
சலிப்பும் பிதற்றலில் பின்வாங்கும்

கடித்து குதறி காவடியாடும் நாவிற்கு
திருத்தங்கள் செய்யும் தகுதியும்
தனக்குண்டோ என
வேள்வி செய்யாது போகுது
தழுவிக்கொள்ளும் பார்வையில்
சத்தமின்றி விலகலில்
உயிரோசைகள் தொடரும்.

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# வலி

உயிர்ப்பொன்று இருக்கத்தான் செய்கிறது
நெருப்பைப்போல தகப்பை காட்டி தன் இருப்பைச்சொல்கிறது.

வேண்டாம் வேண்டாம் தள்ளிப்போய் விடு
உயிர்ப்பைக்காட்டும் இதயத்தினுள் தாளலயமாறி
வலிவொன்று அரித்துக்கொண்டே உணர்த்துகிறது.

என்ன இது இப்படி வலியைத்தருகிறதே.
தனலைக்கொட்டியதைப்போல சுடுகிறதே.

நெற்றியடியாய் சுற்றிக்காட்டிட
கட்டுக்குள் அடங்காத வலி வெளிவருகிறதே .



போய் விடேன்
வலித்தீரா வலியேது.
வழியவே வந்து வாழ்வையே நொந்து
வழியே வந்து விடேனென்றே கிடக்க
உனக்கென்னவோ சலிப்புத்தான் இல்லையோ.

சுளித்துக்கொள்ளத்தான் வேண்டுமோ
பழித்தீர்த்திடுமோ.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# அதிகாரம்

ஆத்திகம் நாத்திகம்
இரண்டும் எதிர்க்கும்
தனிமனித வழிபாட்டை மட்டுமே
குறிக்கோளாகக் கொண்டு இயங்கும்
மூடர் கூட்டம்
தனக்கும்
அறிவு இருப்பதாக காட்ட
கருத்துகள் சொல்லும்
அக்கருத்துக்காக
கற்பனை வளர்க்கும்
அக்கற்பனையில்
உதித்த பொய்யை
புரளியாக பரப்பும்
புறணியாக பேசும்
அந்த
புரளிக்கும் புறணிக்கும்
நோக்கம்
ஒன்றே ஒன்றுதான்
அதிகாரம்
அதிகாரம்
அதிகாரம்

கவிஞர் கரு. இராமச்சந்திரன், அருப்புக்கோட்டை

காலம் கடந்த மழலையாக
இன்றும் மூச்சில் அதன் வாசம்

சுழித்தோடும் நீர்
கல்லெறிதலில் சற்று கலங்கினாலும்
தன் வழி சுழன்றோடுவது போலவே.

தூரத்தில் கேட்கும்
அமைதியின் பின்
இரைச்சலில் கலங்காது
இருந்தபடியே மனதோடு நகரும்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# வேர்கள்

முதலாளித்துவத்தில்
முடங்கிப் போனது
காடுகள்
//
மழை கம்பிகள்
மண்ணை அருத்து
பதம் பார்த்து விட்டது
பேதமறியாமல்
//
விரல்களால்
இறுக்கிப்பிடித்து மண்
தாயை மடியில்
காத்தோம் மரங்களாய்
நாங்கள்!
//
எங்கள் உறவுகளைப்
பிரித்துப்போட்டு
விறகுகளாய்
மாற்றினீர்கள்!
//
உங்களை
கைக்கொடுத்துக்
காப்பாற்ற யாருமில்லை
எங்கள் கைகளைப்
பறித்ததினால்




இயற்கை தாயே !
உங்கள் இறைவன்
என்று இதயத்தில்
எழுதுங்கள்
//
மழை பேயாகப்
பொழிந்தாலும்
இறுகப் பற்றிக் கொள்வோம்
இனியாவது விழித்துக் கொள்ளுங்கள்
எங்களை அழிக்காமல்
இருக்க!

கவிஞர் த. சித்ரா, தீரன் நகர், திருச்சி

# தேசிக விநாயகம் பிள்ளை

## பிறப்பு, கல்வி



தேசிகவிநாயகம் பிள்ளை என்ற கவிமணி ஜூலை 27, 1876-ல் தென்திருவிதாங்கூரில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) தேரூர் என்ற ஊரில் சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி இணையருக்கு இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு மூன்றாவது மகனாக பிறந்தார். கவிமணியின் பாட்டனார் மாணிக்கவாசகம் பிள்ளை தமிழறிஞர், காரியந்தாதி என்னும் நூலின் ஆசிரியர். கவிமணியின் தாய்மாமன் சொற்பொழிவாளரான கம்பராமாயணம் பாலசுப்ரமணிய பிள்ளை. கவிமணியின் மனைவியின் தமையன் சங்கரநாராயண பிள்ளையும் கம்பராமாயணச் சொற்பொழிவாளர்.

கவிமணியின் தந்தை சிவதாணுப்பிள்ளை அழகியபாண்டிபுரம் உப்புப் பண்டகசாலையில் கண்காணிப்பாளராக திருவிதாங்கூர் அரசு ஊழியராகப் பணியாற்றினார். கவிமணியின் அன்னை ஆதிலட்சுமியின் தந்தை மாணிக்கவாசகம் பிள்ளை நாகப்பட்டினத்தில் கப்பல் வணிகம் செய்து வந்தவர்.

கவிமணி இளவயதில் மலையாளம் படித்தாலும் தமிழை கற்றுக் கொண்டார். தேரூர் திருவாவடுதுறை தம்புரானிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்றார். தனது ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார். புகுமுக வகுப்பான எஃப்.ஏ. படித்த கவிமணி கல்லூரிப்படிப்பை தொடரவில்லை. பின்னர் ஆசிரியர் பயிற்சி படித்தார். தேரூர் அருகே திருவாவடுதுறை மடத்திற்கு சொந்தமான மடத்தில் தங்கியிருந்த சாந்தலிங்கத் தம்புரான் என்பவரிடம் தமிழ் பக்தி இலக்கியங்களை பாடம் கேட்டார்.

# மாலவனும் வைணவமும்

## பகுதி 42

### ஆண்டாள் பகுதி 12 நாச்சியார் திருமொழி பகுதி 4 இரண்டாம் திருமொழி

நாச்சியார்தம் திருமொழிகள் பதிநான்கில் இரண்டாவது
பத்துபாக்கள் கொண்டுளது! அஃதினிலே முதலாமது
எம்பெருமான் கைவிட்டதால், மன்மதனை பிரார்த்தித்ததை
எண்ணிநொந்து, காக்கவைத்தல் கூடாதென நேரில்வர;
சீற்றத்தால்; சிற்றிலமை விளையாட்டில் மூழ்கினரே!
அன்னவனை மதியாதே இருந்ததனால்; சிதையாதே
பாதுகாக்க தடுப்பதுவும், அதனாலே ஊடலதும்,
பின்கூடி பிரிவதுமாய் தொடர்ந்ததே! மார்கழி
தைமாசி மூன்று மாதங்கள் கடந்ததுவே!
பங்குனியின் பிறப்பதனால்; மன்மதனின் வரும்வழியில்;
சிற்றில்லை அமைத்திடினும், நீகலைத்தல் நன்றன்று
என்றுரைப்பர்! இரண்டாவது பாசுரத்தே, நாள்முழுதும்
முதுகுநோக இழைத்திட்ட சிற்றில்லை கண்ணாரக்
கண்டிருந்து, ஆர்வமது உற்றோமே! இரக்கமிலாது
அழிப்பையோ? யாம்செய்த பாவமென்னே? மூன்றாவது
பாசுரத்தே, சிற்றில்லை சிதைப்பதுடன், எங்களையே
நலிவிப்பதை நிறுத்திடுக என்பாரே! நான்காவது
பாசுரத்தே, உன்மாய முகமந்திரந் தன்னாலே,
எமைமயக்கி, எம்சிற்றிலை சிதைத்திடாதே சொக்கிடச்செய்
முகமதுவோ நின்றனது! ஐந்தாவதில் உன்னுடைய
செயலெதற்கும் சீற்றமுறா எங்கள்நிலை, உன்கண்கள்
அறிந்திலதோ? சிற்றில்லை அழித்திட்டால், எம்நெஞ்சு
உடைபடுமே! நின்மீது சீற்றத்தைக் கொள்ளோமே!
உன் கண்ணால் கண்டிடலாம் என்றுரைத்த, இவ்வைந்தும்
எண்ணுந்தொறும் மாமகிழ்வு சேர்த்திடுமே! பேச்சாலே
பிச்சேற்றி, கலங்கவைப்பான் மன்னனவன்! ஆசைப்படும்
எங்களைநீ, துன்புறுத்தல் தவிர்த்திடுக! தீம்புகளை
செய்திடுவோம் என்றாலும் எங்கட்கு இழையாதே!
ஏற்குமாற்றல் எமக்கிலதே! மீதமுள்ள ஐந்தினையும்
தொடர்வோமே! அமுதூறும் பாச்சுவையில் மகிழ்வோமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# வேலைக்கு போகிறேன்

வேலைக்கு போகிறேன் என்பது தவறு
வேலையில் சாகிறேன் என்பது சரி
மாமியாரை விட கொடுங்கோலன் மேலாளர்
ஆண் மாமியார் ஒரு இரகம்
பெண் மாமியார் பிடாரி குணம்

வார்த்தைகள் போல கொலை கருவி இங்கில்லை
பார்வைகள் போல சுடு நெருப்பு ஏதுமில்லை
இத்தனை கிழித்தும்! இத்தனை சுட்டும்!
எத்தனை எத்தனை கொடுமை அனுபவித்தும்



மறுநாள்! அதற்கும் மறுநாள்!
மறுபடியும்! மறுபடி மறுபடியும்!
எத்தனை நெஞ்சுரம் எனக்கு?
எத்தனை தீர்க்காயுள் எனக்கு?

அந்த மூன்று நாட்கள்
நொந்த மீத நாட்கள்
பிள்ளைப் பேறு
பாலூட்டும் நாட்கள்

விதிவிலக்காக ஏதுமில்லை
விடிந்த பகல் ஒன்று கூட இல்லை
சாகத் துணிந்தவளுக்கு சமுத்திரம் முழங்கால்
ஒரு முறை போனால் தானே சாவு?
ஒவ்வொரு முறையும் போனால்?

நடிக்க மட்டும் கற்றுக் கொள்ள வேண்டும்
பொய்யும் வாய்மையுள் சேர்த்தி தான்
எப்போதும் உதட்டில் தேக்கிய சிரிப்பு
கண்ணாடியிடம் வெளுத்து விடுகிறது நவரசமும்

இறைவியே இறைஞ்சுகிறேன் உன்னை
ஓர் நாள் வந்து அலுவலகத்தில் உழலு
புன்னகையை தொலைத்து விட்டு பதறு
நரகத்தை இடம் மாற்றி விட்டு விலகு

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி

# சண்முக வெண்பா

## பா வகை = இன்னிசை வெண்பா

1.தேனுவினை வண்டிதனில் பூட்டிமேல் அங்கமர்ந்து
தேனுதனை தன்வழியுள் உட்படுத்தும் ஓட்டுநர்போல்
ஊனுடம்பு வண்டியினை ஊழ்தனிலே பூட்டிட்டு
தானும்மேல் அங்கமர்வான் கண்டு.

2. உணர்வீர் உலகத்தீர் சண்முகனே யாவுமென
காணுவீர் தேனுதனை பூட்டும் கயிறுபோல்
பேணும் தணுவதனை ஊழ்தன்னில் பூட்ட
உணர்வீர்தாம் கந்தனையே இன்று



3. கரம்தனில் சாட்டைதான் கொண்டு வழிநடத்தும்
சீரான பாங்குபோற் கந்தன் அருளென்னும்
நேரான சாட்டைதான் கொண்டு வழிநடத்தி
சீரான வாழ்வருள்வான் ஆம் .

4. பாரினில் ஆறுமுகம் கொள்கந்தன் போல்தெய்வம்
பாரில் எதுவென்று கூறீர் அருள்பெற
ஊரில் தினம்தினம் சென்றுசென்று கைகூப்பி
பாரீர் உயர்வீர் உணர்ந்து

கவிஞர் பு. பேச்சிமுத்து, விருதுநகர்

# காலநிலை மாற்றத்தின் கவலைதரும் நிகழ்வு!

வயநாடு! கேரளத்தின் வடகிழக்கு மாவட்டம்!
இயற்கைப் பேரழிவை அதிகம் எதிர்கொள்ளும்
கடவுளின் தேசத்தில் ஜூலை முப்பதாம்நாள்
விடியலில் கோர நிலச்சரிவு! ஓயாமல்
ஓரிரு வாரங்களாக பெய்துவந்த மழை
ஓரிரவில் பெருமழையாகி பெருந்தீங்கை விளைத்ததுவே!
முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை, நூல்மலை
இங்கெல்லாம் பெருந்துயரம் நிலச்சரிவால் நிகழ்ந்ததுவே!
பாறைகளும், மண்ணும் சகதியும் கலந்துவந்த
பெருவெள்ளம் உறங்கிக் கொண்டிருந்த மக்களை
உருக்குலைய வைத்து உயிரோடு புதைத்தது
கேரளத்தின் வரலாறு காணாத பேரழிவாகியதே!
காலநிலை மாற்றத்தின் கவலைதரும் நிகழ்விதுவே!
வெள்ளத்தில் சென்ற உடல்கள் மலப்புரம்,
நிலம்பூரில் கண்டெடுக்கப் படுவது சீற்றத்தின்
அளவினைச் செப்புவதாய் அமைகிறதே!அமர்ந்த
நிலையில் சாய்வு நாற்காலியில் முதியவரின்
சடலம்! குடும்பத்தினர் ஒருவரை ஒருவர்
கட்டிப் பிடித்தபடி புதைந்தழிந்த துயரம்!
உயிருக்குப் போராடும் வாயில்லாப் பிராணிகள்
ஓலங்கள்! வளர்த்தவரைத் தேடி அலையும்
வளர்ப்பு பிராணிகள்! காண்போரின் கண்களைக்
குளமாகச் செய்கிறதே! உயிர்களைக் காக்க
களமிறங்கிய பொதுமக்கள்! மானுடம் வாழ்வதை
உலகிற்கு உணர்த்திடுதே! யாரைக் குறைசொல்ல?
பலமுறை முன்னரே நிலச்சரிவுகளை எதிர்கொண்டும்
பேரழிவு மேலாண்மை ஆணையம் , ஐ.நா சபையின்
பருவநிலை மாற்றம்குழு மூன்றாண்டுகளுக்கு முன்னமே
பேராபத்து குறித்து கேரளத்தை எச்சரித்தும்
அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதோ?
சுற்றுலா வளர்ச்சி எனும்பெயரில் விதிகளைமீறி
விடுதிகள், வீடுகளைக் கட்டுதலும், வனமழித்தலும்,
செயற்கை ஏரிகளை அமைத்தலும் சுரங்கப்பணிகளும்
சூழலியல் சீர்கேட்டை உருவாக்கியதால் பேரழிவு!
இனியேனும் விழித்தெழுவோம்! சூழலினைக் காப்போம்!
அனைவரும் கரம்நீட்டி கேரளத்தின் துயர்துடைப்போம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# நீ உன்னை அறிந்தால்

## (நாடகம்)

காட்சி -1



(ராஜன் வீட்டின் முன்னறை. மல்லிகா காபி கொண்டு வந்து கொடுக்க, பேப்பர் வாசித்துக் கொண்டிருந்த ராஜன்,காபியை வாங்கி பருகுகிறான்.)

**மல்லிகா:** பக்கத்து வீட்டு தேவிகா நேற்று புதுசா ஒரு வைர மாலை வாங்கியிருக்கிறாள்.

**ராஜன்:** அடுத்தவர்களோடு நம்மை எப்போதும் கம்பேர் பண்ணிப் பார்க்காதே. நம்முடைய வருமானத்திற்கு ஏற்ற செலவை தான் நாம் செய்ய முடியும்.

**மல்லிகா:** ஆமா அவ வீட்டுக்காரரும் உங்க ஆபிஸிலே தானே வேலை செய்கிறார். அதுவும் உங்களுக்கு கீழே தான் வேலை செய்கிறார். அவர் வீட்டுலே கார் இருக்கிறது. செம்பூரிலே இன்னொரு வீடு வாங்கியாச்சு. நாளும் கிழமையும் பட்டுப்புடவையாக எடுத்துத் தள்ளுகிறாள். நினைத்தால் உடனே தங்க நகை வாங்குகிறாள். உலகத்திலே உள்ள எல்லா மாடல்களிலும் வைர நகை வச்சிருக்கா. நம்ம வீட்டுல ஒரு பண்டிகைக்கு புதுத்துணி எடுக்கவே யோசிக்கிறீங்க. பட்டுச்சேலை எனக்கு கல்யாணத்திற்கு எடுத்தது. அப்புறம் பட்டுச் சேலையை அடுத்தவங்க உடுத்துதான் பார்த்திருக்கிறேன். எங்க அப்பா போட்ட ரெட்டை வடச் சங்கிலியைத் தவிர ஒரு பொட்டுத்தங்கம் வாங்கித் தந்ததுண்டா.

**ராஜன்:** மல்லிகா, திரும்பவும் புலம்ப ஆரம்பிச்சுட்டியா? தேவிகா வீட்டுக்காரன் அங்கே இங்கே மேஜைக்கு கீழே பணம் வாங்குகிறான். நான் அப்படியில்லை. நேர்மையாக வேலை செய்து வாய்மையே வெல்லும் என்ற கொள்கையோடு இருக்கிறவன்.மல்லிகா லஞ்சம் வாங்கி இப்படி கார் பங்களா தங்க நகை என இருப்பதை விட உன் புன் நகையோடு நேர்மையாக வாழ்ந்தால் போதாதோ.

**மல்லிகா:** ஆமா, இந்தக் கொஞ்சலுக்கு மட்டும் குறைச்சலில்லை. ஆ.... பூ.... என்று சொல்லி வாயடைத்து விடுவீர்கள். பணம் சம்பாதிக்க வழி தெரியவில்லை. இப்படிக் கொஞ்சல் என்ன வேண்டியதிருக்கு.... கொஞ்சல்.

திரு இராஜகை நிலவன், மும்பை

# நீ உன்னை அறிந்தால்

## (நாடகம்)

ராஜன்: நாம் நேர்மையாக வாழ பழகிக் கொள்வோம். நீ தானே அடிக்கடி சொல்வாய்.வாழ்க்கையில் எப்போதும் தவறான பாதைக்குச் செல்லக் கூடாது என்று.

மல்லிகா: அதற்காக பணம் சம்பாதிக்கக் கூடாதென்று சொன்னேனா.

ராஜன்: தவறான வழியில் சம்பாதிக்கும் பணம் தங்காதடியம்மா.

மல்லிகா: சும்மா வேதாந்தம் பேசாமல் பணம் கொண்டு வரப் பாருங்க. பொண்ணுக்கும் வயதாகிவிட்டது. இனி அவளுக்கு வரன் பார்க்க வேண்டும்.

ராஜன்: அதற்காக தவறான வழியில் சம்பாதிக்கச் சொல்கிறாயா.

மல்லிகா: ஏன் தேவிகா வீட்டுக்காரர் மோகன் சம்பாதித்துக் கொட்டவில்லையா? ஏன் இப்படி நத்தை கூட்டுக்குள் குடித்தனம் நடத்தனும்?

ராஜன்: இது தவறு என் அன்பு மனைவியே.

மல்லிகா: தப்பு நியாயமெல்லாம் தேவைகளை மீறித்தான் ஒழுங்காக நிறையச் சம்பாதிக்கப் பாருங்க.

ராஜன்: ஏன் இப்படிப் பணப்பேய் பிடித்து அலைகிறாய்.

மல்லிகா: உங்களுக்கென்ன, காலையிலே ஆபீஸ் போய் விடுவீர்கள். சுத்தி இருக்கிறவங்க எல்லாம் உன் வீட்டுக்காரருக்கு உதவியாளராக இருக்கின்ற மோகன் இப்படிச் சம்பாதிக்கிறார். உங்க வீட்டுக்காரருக்கு சம்பாதிக்க போதுமான தெம்பு கிடையாதோ என்று எல்லோரும் என்னைக் கிண்டல் பண்ணுகிறார்கள்.

ராஜன்: அதற்காக நான் தவறான பாதையில் ஒரு நாளும் போகப் போவதில்லை.

மல்லிகா: இப்படியே தரித்திரத்தில் தான் வாழ்க்கை நடத்தனும். நான் எங்க அம்மா வீட்டிற்குப் போகிறேன்.

ராஜன்: அது உன் விருப்பம்

(அழுது கொண்டே மல்லிகா போக, காபியை பருகுகிறார் ராஜன்.)

**தொடரும்...**

திரு இராஜகை நிலவன், மும்பை

# நூல் அனுபவம்

நூலின் பெயர் : கதவிடுக்கில் நசுங்கும் இருள்
நூலாசிரியர் : மூ. மணி திருமுருகன்
நூலின் விலை : 80
நூல் வெளியீடு : அகநி வெளியீடு
நூல் வாங்க : 88833 33466.




நூலாசிரியர் மணி திருமுகன் அவருக்கு இது இரண்டாவது புத்தகம் கதவிடுக்கில் நசுங்கும் இருள் புத்தகத்தின் தலைப்பே நமக்கு ஒரு ஜென் உணர்வை உணர்த்துகிறது. நூலுக்கு அணிந்துரை கலாப்ரியா அவர்களும் வாழ்த்துரை மு.முருகேஷ் அவர்களும் தந்து புத்தகத்தை செழுமை படுத்தியுள்ளனர்.

வளையல் கேட்ட மகள்
ஞாபகப்படுத்தியது
ஊருணி நீர்.

தந்தை மறந்த வேளளையில் வளையல் கவிதை வழியே வந்து ஞாபகப்படுத்திவிட்டது
இப்படி எழுத கவிஞர் எப்போதும் கவிதையிலே ஊறிக்கிடப்பதை நன்றாக வளையமிட்டு காட்டுகிறது அவருடைய கவிதை.

தூவானம்
மையம் கொள்கிறது
குஞ்சுகளோடு கோழி.

தூறுகின்ற வானத்தை அடைக்காக்கும் கோழி நனைத்துவிடுகிறது நம் மனதையும்.

சிறாரின் உண்டியல்
பண்டிகையை
எதிர்ப்பார்த்தபடி
அப்பா.

திரு சீ. இராஜ்குமார், (நூல் விமர்சகர்), திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

இந்த கவிதையை படிக்கும்போது
நெருங்கும் பண்டிகை
உடைகிறது
குழந்தைகள் சேமித்த உண்டியல்.

என்ற கவிதை தான் நினைவிற்கு வருகிறது. ஆடி மாதம் பிறந்ததும் ஆடி பதினெட்டாம் பெருக்கு முருகன் கோவிலுக்கு செல்ல நாங்கெல்லாம் வேப்பங்கொட்டைகளை சேகரித்து விற்ற பணத்தை உண்டியலில் சேமித்து அந்த பணத்தை திருவிழவாவில் செலவு செய்வோம் . என் வாழ்வியலை நினைவுபடுத்திய கவிதை.

கதவு இடுக்கில்
நசுங்கிப்போனது
படர்ந்த இருள்.

எங்கே அந்த கவிதை என தேடி தேடி படித்துக்கொண்டிருக்க 48 வது கவிதையில் கிடைத்துவிட்டது ..இந்த கவிதை நன்கு ஆழ்ந்து சிந்தித்தால் பல பொருள் விளங்கும்.

நண்டு பிடிக்கப்போய்
தொலைந்துப்போனது மோதிரம்
மூடி மறைத்தது நதி!

இந்த கவிதையை படித்ததும் உங்களுக்கும் இதுபோல நடந்த அனுபவம் இருக்கும்.

பரந்த மரத்தின் நிழலில்
சிக்கனமாகப் படுத்து
உறங்கும் நாய்.

மனிதன் தான் பெரும் செல்வத்தை சேர்த்துக்கொண்டிருக்கிறான். நாய் உறங்குவதற்கு அந்த இரண்டடி நிலமே போதுமானதாய் இருக்கிறது. இதை தான் ஜென்னும் சொல்கிறது.

ஊர்க்குளத்தில்
பாகுபாடு பார்ப்பதேயில்லை
பறவைகளும் விலங்குகளும்

பாகுபாடு பார்க்காத கவிதை இது கவிஞர் இன்னும் பல கவிதைகளை பாகுபாடின்றி படைத்திட வாழ்த்துகள்.


திரு சீ. இராஜ்குமார், (நூல் விமர்சகர்), திருப்பத்தூர் மாவட்டம்

# மயிலை சிவ. முத்து

கட்டுரை

## பிறப்பும் கல்வியும்

மயிலை சிவ. முத்து 1892ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் சிவானந்த முதலியாருக்கும் விசாலாட்சி அம்மையாருக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார்.



தமிழறிஞர் மணி, திருநாவுக்கரசரின் அறிமுகம் கிடைக்க அவரிடம் தமிழ் பயின்று புலவர் தேர்வில் தேர்ச்சி பெற்று பின்னர் 1914ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். இதே ஆண்டில் சென்னை சைவ ஆரம்பப் பாடசாலையில் தலைமையாசிரியராய் பணியில் சேர்ந்தார். 1917இல் முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார். அங்கு தொடர்ந்து பணியாற்றி 1947இல் ஓய்வு பெற்றார்.

மயிலை சிவமுத்து அவர்கள் "நல்ல எறும்பு" என்ற தலைப்பில் ஒரு குறுநாவலை எழுதியுள்ளார். பத்து அத்தியாயங்கள் கொண்டது இந்த சிறு நூல். தலைப்பிற்கு ஏற்றவாறு ஓர் எறும்பு முக்கிய கதாபாத்திரமாக வருகிறது.

## ஆற்றிய பணிகள்

1914ஆம் ஆண்டில் சென்னை கொண்டியம்பதியில் சிவனடியார் கூட்டத்தாரால் நடத்தப்பட்டு வந்த சைவ ஆரம்பப் பாடசாலையில் தலைமையாசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார்.

1917ஆம் ஆண்டில் முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியை ஏற்றார். அங்கேயே தொடர்ந்து பணியாற்றி 1947ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

திரு அ.வில்சன், தமிழாசிரியர்

## தமிழ்ப்பணி

1931ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் தலைமையில் உருவாக்கப்பட்ட மாணவர் மன்றப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

1938ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட தொண்டர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார்.

மருத்துவர் தருமாம்பாள் தலைவராக இருந்த தாய்மார்கள் கழகத்தில் திருக்குறள் தொடர் வகுப்புகளை நடத்தினார்.

1957ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் மறைவுக்குப் பிறகு மயிலை சிவ. முத்து மாணவர் மன்றத்தின் தலைவர் ஆனார்.

1961ஆம் ஆண்டில் மாணவர் மன்றத்தின் சார்பில் நித்திலக்குவியல் என்னும் இதழைத் தொடங்கினார். அவ்விதழின் ஆசிரியராக இருந்தார். மாணவர் மன்றத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டினார். அம்மன்றத்தின் சார்பில் 1963ஆம் ஆண்டில் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்தினார்.

## நூல்கள்

- என் இளமைப் பருவம்
- தமிழ்த் திருமண முறை
- சிவஞானம்; மாணவர் மன்றம், சென்னை.
- தங்கநாணயம்; மாணவர் மன்றம், சென்னை.
- தமிழ்நெறிக்காவலர்; மாணவர் மன்றம், சென்னை.
- திருக்குறள் — எளிய உரை
- நல்ல எறும்பு; மாணவர் மன்றம், சென்னை.
- நித்திலக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.
- நித்தில வாசகம்
- முத்துக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.



# கட்டுரை

## நூல்கள்

- முத்துக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.
- முத்துப்பாடல்கள் (இந்திய ஒன்றிய அரசின் பரிசைப் பெற்றது)
- வரதன்; மாணவர் மன்றம், சென்னை.

## மயிலை சிவ. முத்து குழந்தை பாடல்



அப்பாவைப் போல் நான் ஆனால்
தண்ணீர்ப் பந்தல் வைத்திடுவேன்
தருமம் பலவும் செய்திடுவேன்

அப்பாவைப் போல் நான் ஆனால்
எங்கும் பொன்னே குவித்திடுவேன்
எல்லோ ருக்கும் அளித்திடுவேன்

அப்பாவைப் போல் நான் ஆனால்
உலகம் முழுதும் சுற்றிடுவேன்
உண்மை பலவும் கற்றிடுவேன்

சிவமுத்து எழுதிய நாற்பத்து ஐந்து குழந்தைப் பாடல்கள் தொகுக்கப்பட்டு "முத்துப் பாடல்கள்" என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்தது. இவர் "திருக்குறள் இனிய எளிய உரை" முதலான நூல்களையும் படைத்துள்ளார். 1959ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் மயிலை சிவமுத்து அவர்களின் குழந்தை இலக்கியப் பணிகளைப் பாராட்டி அன்றைய ஆளுநர் விஷ்ணுராம் மேதி அவர்கள் கேடயம் வழங்கி கௌரவித்தார்.

## மறைவு

மயிலை சிவ. முத்து 1968 - சூலை 6ஆம் நாள் சென்னையில் இயற்கை எய்தினார்

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

தினமும்

ஓய்வில்லாமல்

உழைப்பதால்தான்

எல்லா இடத்திலும்

உயரத்தில் உள்ளது

கடிகாரம்

அகமும் தமிழே                                முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போறும்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com